பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

அன்பளிப்பு

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 தை 7 ஞாயிற்றுக்கிழமை (21-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 56

### ராணுவ நடவடிக்கையின் 4 ஆம் நாள்

# கிழக்குக் காடுகளை படை ஆக்கிரமிப்பு!

## சில இடங்களில் மோதல்

சாவகச்சேரி, ஜனவரி. 21

கிழக்கில் கடந்த புதன்கிழமை ''சூரிய ஒளிக்கற்றை'' இராணுவ நடவடிக்கையை பெருத்த எடுப்பில் ஆரம்பித்த ஸ்ரீலங்காப் படைகள் நான்காவது நாளான நேற்று எந்த வித இலக்குகளையும் எட்டாத நிலையில் பெருமளவு காடுகளை ஆக்கிரமித்திருப்பதாக ''புலிகளின் குரல்'' வானொலி அறிவித்தது.

சிற்சில இடங்களில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு நகரில் இருந்து 4 முனைகள் ஊடாக புறப்பட்ட இராணுவத்தினரும்—

பொலனறுவ, வெலிகந்தயில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினரும்— இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு நகரில் இருந்து இரு முனைகளில் முன்னேறிய இராணுவத்தினர் தமது பழைய நிலைகளுக்கு பின்வாங்கி விட்டனர்.

வலையிறவு முகாமில் இருந்து வெளியேறி வவுணதீவுக்குச் சென்ற இராணுவ அணிகளும், பட்டிருப்பு, பளுகாமம் ஊடாக வெளியேறிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாதுறு ஓயாவில் 12 படையினர் காயம்

கிழக்கில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவ அணிகளில் ஒன்று மாதுறு ஓயாப் பகுதியில் முன்னேற முயன்ற சமயம் நேற்றும், நேற்று முன் தினமும் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானதாக அறிவிக்கப்படுகின்றது.

தரவைக்குளம் பகுதியில் இடம்பெற்ற இம்மோதலில் 12 படையினர் காயமடைந்ததாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-3-6-7)

## மட்டு. மேற்கு பிரதேசத்தில் நடமாடத் தடை

கொழும்பு, ஜன. 21

கிழக்கில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதை அடுத்து மட்டக்களப்பு மேற்கு பிரதேசம் மக்கள் நடமாட்டத்துக்கு தடை செய்யப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

(உ-7)

## இடம்பெயர்ந்த ஆசிரியரிடம் விவரம் கேட்கிறது அரசு

சாவகச்சேரி, ஜன. 21

வலிகாமத்தில் உள்ள பாடசாலைகளை விரைவில் இயங்க வைக்கப்போவதாகவும், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஏற்கனவே சில ஆசிரியர்கள் அங்கு பணியாற்றுவதாகக் காட்டிக் கொண்டு, அவர்களைத் தமது விவரங்களை யாழ். மத்திய கல்லூரியில் அல்லது காங்கேசன்துறை சிவில் நிர்வாக அலுவலகத்தில் தெரிவிக்குமாறு கேட்கிறது!

அது ஒரு புறமிருக்க—

வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்த ஆசிரியர்களை அவர்களது விவரங்களை பத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளத்தில் புலிகள் தாக்குதல்

கொழும்பு, ஜன 21

புத்தளம் பகுதியில் உள்ள மூமைல்கஸ்வெவ என்னும் இடத்தில் உள்ள பொலீஸ்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### முன்னேறிய படையினர்

# இரு முனைகளில் விரட்டியடிப்பு!

சாவகச்சேரி, ஜன. 21

மட்டக்களப்பில் இருவேறு இராணுவ முகாம்களில் இருந்து நேற்று முன் தினம் பெரும் எடுப்பில் கரடியனாறு நோக்கி முன்னேறி வந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் வழிமறித்து தாக்கி பின்வாங்கச் செய்திருப்பதாகக் களத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் செங்கலடி இராணுவ முகாமில் இருந்தும் கொம்மாதுறை இராணுவ முகாமில் இருந்தும் இராணுவத்தினர் கனரக வாகனங்கள் சகிதம் முன்னேறினர்

பூமாந்சேனை என்ற இடத்தில் வைத்து இந்த இராணுவத்தினரை வழிமறித்து விடுதலைப் புலிகள் சமர் புரிந்து அவர்களை தமது ஆரம்ப நிலைகளுக்குக் பின்வாங்க வைத்தனர்.

இச்சமரின் போராளிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்டவில்லை ன்றும் அறிவிக்கப்பட்டது. [உ-3]

## பட்டிருப்புப் பாலத்தில் பொலீஸ் மீது தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு பாலத்தில் தமிழ்ப் பெண்களிடம் தகாத முறையில் நடந்து கொண்ட பொலீஸார் ஒருவர் மீது நேற்று முன்தினம் மாலை 4-30 மணி அளவில் விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக புலிகளின் குரல் அறிவித்தது.

பாலத்திலிருந்து 100 மீற்றர் தூரத்தில் வைத்து நடத்தப்பட்ட இத்தாக்குதலில் அந்தப் பொலீஸ் கான்ஸ்டபிள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். அவரிடமிருந்து ஏ. கே. ரகத் துப்பாக்கி ஒன்று, அதற்குரிய ரவைக்கூடுகள் இரண்டு, நடுத்தர ரவைகள் அறுபது, கைக்குண்டுகள் இரண்டு என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. (உ-7)

## தி. மு. க. - இ. காங்கிரஸ் கூட்டணி உருவாகும்?

சென்னை. ஜன. 21

தமிழகத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திரா காங்கிரஸ் கட்சியும் கூட்டணி அமைக்கும் சூழ்நிலை உருவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வரும் 26 ஆம் தி தி திருச்சியில் நடை பெறும் கட்சியின் மாநில மாநாட்டில் புதிய கூட்டணி உருவாகும் என்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி குறிப்பிட்டிருக்கின்றார்.

காங்கிரஸில் இருந்து பிரிந்த—அர்ஜுன்சிங் மற்றும் வாழப்பாடி ராமமூர்த்தி ஆகியோரின் கட்சியான— போட்டி காங்கிரஸுடன் சேர்ந்து தி. மு. க. அமைத்திருந்த ஏழு கட்சிக் கூட்டணி பிளவுபட்டு விட்டதாகக் கூறப்படுகின்றது.

அந்தக் கூட்டணியிலிருந்து போட்டி காங்கிரஸ் விலகி விட்டது; அல்லது விலக்கப்பட்டு விட்டது.

தி.மு.க. — இந்திரா காங்கிரஸ் ஆகியன கூட்டுச் சேர்வதற்குத் தடையாக இருந்த—

போட்டிக் காங்கிரஸுடனான கூட்டும், வை.கோபாலசாமியும் தி. மு. கவில் இப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணி ஈ. பி. டி. பி. ஆதரவு?

கொழும்பு, ஜன. 24

அரசின் தீர்வுத் திட்ட சட்ட வரைவு குறித்து தங்களின் நிலைப்பாடு என்னவென்பதை தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஈ. பி. டி. பியும் இதுவரை தெளிவுபடுத்தவில்லை. ஆனால் ஆய்வாளர்களின் கருத்துப்படி அவை இரண்டும் தீர்வுத் திட்டத்துக்கு அனேகமாக தமது ஆதரவை வழங்கும்.

— இவ்வாறு பி. பி. ஸி நேற்று கருத்து வெளியிட்டது. (உ)

# தீர்வுத் திட்ட சட்ட வரைவு: 4 தமிழ்க் கட்சிகள் ஏமாற்றம்

### ரெலோ, புளொட், ஈ. பி. ஆர். எல். எவ், ஈரோஸ் கூட்டறிக்கை

கொழும்பு, ஜன. 21

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான அரசின் தீர்வுத் திட்ட சட்டவரைவு தங்களுக்கு ஏமாற்றமளிப்பதாக இருப்பதாக புளொட், ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ்., ஈரோஸ் ஆகியன அறிவித்துள்ளன.

சட்ட வரைவைத் தாங்கள் எதிர்க்கவில்லையாயினும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது குறிப்பிடப்படாதுள்ள சில அம்சங்கள் தங்களை ஏமாற்றமடைய வைத்திருப்பதாகவும் — கவலையடைய வைத்திருப்பதாகவும்— அவை தெரிவித்துள்ளன.

இந்த விடயம் தொடர்பாக அவை வெளியிட்டுள்ள இரண்டு பக்க கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ ஒன்றிணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு என்ற விவகாரத்துக்கு இந்தச் சட்ட வரைவில் முடிவு எதுவும் தெரிவிக்கப்படவில்லை

★ மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களுடன் ஒப்பீடுகையில் பிராந்திய சபைக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டமை மிக மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

★ சட்ட வரைவில் தெரிவிக்கப்பட்ட ஏற்பாடுகள் மத்திய அரசு பிராந்திய நிர்வாகத்தில் [illegible] வகுக்கும்.

★ பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள அரசமைப்புப் பாதுகாப்பு, இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

★ தமிழ் மக்களின் பாரம்பரிய பிராந்தியத்தில் ஒழுங்குமுறையிலான குடியேற்றத்தினால் ஏற்பட்டுள்ள அநீதிகளை அகற்ற தேசியக் கொள்கை ஒன்றை வகுக்க

[6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னைய தீர்வுத் திட்டத்துக்கு நறுமணம் பூசி அழகுபடுத்தியுள்ளனர்

## தினேஷ் குணவர்த்தன கூறுகிறார்

கொழும்பு, ஜன. 21

கடந்த ஓகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட அரசியல் தீர்வு யோசனைகளுக்கும் தற்போது சட்ட வடிவாக வெளியிடப்பட்டுள்ள] தீர்வுயோசனைக்கும் இடையே எதுவித மாற்றத்தையும் காண்பதற்கில்லை. ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட தீர்வு யோசனைக்கே அமைச்சர் பீரிஸ் 'லிப்ஸ்ரிக்' தடவி 'சென்ற்' நறுமணம் பூசி அழகு படுத்தியுள்ளார்;

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தன அரசின் அதிகாரப் பரவலாக்க தீர்வுத்திட்ட சட்டவரைவு குறித்து கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசு வெளியிட்டுள்ள தீர்வுத்திட்டம் குறித்து தாம் கவலை அடைந்திருப்பதாகவும்—

இந்தத் தீர்வுத் திட்ட. சட்ட வரைவை நோக்கும்போது விடுதலைப் புலிகளின் தனிநாட்டு இலட்சியத்தைச் சட்ட அங்கீகாரத்துடன் மேற்கொள்வதையே காணமுடிகிறது என்றும்—

இந்தத் தீர்வுத் திட்டத்தின் மாதிரியை வெளியிட்ட அரசு மக்களின் கருத்தைத் தெரிவிக்குமாறு கேட்டிருந்தது. ஆனால் மக்கள் தெரிவித்த கருத்து எதனையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை என்றும்—

சிங்கள மக்களின் கண்ணில் மண்தூவப்பட்டுள்ளதென்றும்— தினேஷ் குணவர்த்தன மேலும் தெரிவித்தார்.

### கண்டுபிடிப்பு

பொலன்னறுவைப் பகுதியில் படையினரின் பிரதான போக்கு வரத்துப் பாதையான வெலிகந்த — சிங்கபுர வீதியில் வெலிகந்தையிலிருந்து 14 கிலோமீற்றர் தொலைவில் உள்ள நொறிகண்ட என்ற இடத்தில் சக்திவாய்ந்த 4 கண்ணிவெடிகள் கண்டு பிடிக்கப்பட்டதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

---

இடமாற்றம்

**லலிதா ஜுவல்லறி**

(உரிமையாளர் :- செல்லையா இந்திரசித்து)

**லலிதா அணிகலப் பூங்கா**

213. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம்

**22 - 01 - 1996** முதல்

239. கண்டி வீதி, சாவகச்சேரி.

[அரசினர் வைத்திய சாலைக்கு அருகில்]

எனும் முகவரியில் இயங்கவுள்ளது என்பதை வாடிக்கையாளருக்கும், நண்பர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

குறிப்பு :-

எமது ஸ்தாபனத்துக்கு வேறு எந்த இடத்திலும் எந்த மாவட்டத்திலும் கிளைகள் இல்லை என்பதையும் வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

[39989]

---

யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த

**அசோகா நகை அகம்**

24 - 01 - 1996 முதல் சாவகச்சேரி நவீனசந்தை மேல் மாடி (உட்புறம்) 14 ஆம் இலக்கத்தில் இயங்க உள்ளது என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(40089)

---

உ

சிவமயம்

**திருமண விஞ்ஞாபனம்**

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான யுவ வருஷம் தைத்திங்கள் **8** ஆம் நாள் (22-01-96) திங்கட்கிழமை காலை **10-30** மணி முதல் **12-00** வரையுள்ள துதியை திதி சித்தயோகம் அவிட்ட நட்சத்திரம் கூடிய கும்ப லக்கின சுப முகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| தெல்லிப்பளை | கொழும்பு |
| திரு. திருமதி பத்மநாதன் | திரு. திருமதி வேலுப்பிள்ளை |
| தம்பதிகளின் ஏக புத்திரன் | தம்பதிகளின் ஏக புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **சேந்தன்** B.Sc. (Hons) | **கீதா** (A.A.T.) |
| (இரசாயன பகுப்பாய்வாளர், கொழும்பு மாநகரசபை) | (சுருக்கெழுத்தாளர் — Y.M.C.A. கொழும்பு) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு திருமணம் நடத்த பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றதென்பதை நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

வைபவ இடம் :- MIAMI HALL, WELLAWATTE.

★ தங்கள் நல்வரவையும், நல்லாசியையும் நாடும் ★

திரு. திருமதி பத்மநாதன்
10, Moor Road,
Wellawatte.

திரு. திருமதி வேலுப்பிள்ளை
L. Block,
Govt. Flats,
Bambalapitiya.

(39990)

---

வடக்கிற்கு என வந்த

# கூடாரங்கள் கொழும்பில் தேங்கிக் கிடக்கின்றன

கொழும்பு, ஜன. 21

வடபகுதியில் இடம் பெயர்ந்த மக்களுக்கு இருப்பிட வசதி செய்ய 12ஆயிரம் கூடாரங்களை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஜெனிவாவில் இருந்து கொழும்புக்கு அனுப்பியுள்ளது.

அவசர தேவைக்காக முதலில் 2 ஆயிரம் கூடாரங்கள் விசேட விமானம் மூலமும்—

பின்னர் 10ஆயிரம் கூடாரங்கள் கப்பல் மூலமும்— கொழும்புக்கு— அனுப்பப்பட்டுள்ளன என்ற அந்த அமைப்பின் அதிகாரி தெரிவித்தார்.

இவற்றை வடக்கே எடுத்துச் செல்ல பாதுகாப்பு அனுமதி இன்னும் கிடைக்கவில்லை என்று அந்த அதிகாரி தெரிவித்தார். (இ-3)

### இரத்தம் தேவை

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் உள்ள அவசர நோயாளர்களுக்கு ஓ குறூப்நெகட்டிவ் இரத்தம் அவசரமாகத் தேவைப்படுகிறது.

இக்குருதியை கொடையாக வழங்க விரும்புவோர் உடனடியாக வைத்தியசாலையிலுள்ள இரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

[இ-173]

# சிங்களத்தில் மாகாணசபை என்ற சொல் பாவிக்கப்பட்டது ஏன்?

## தென்னிலங்கைப் பேராசிரியர் கேட்கிறார்

கொழும்பு, ஜன. 21

''அரசின் தீர்வு யோசனை சட்ட வரைவில் சிங்கள மொழியில் மாகாண சபை என்றும், ஆங்கில மொழியில் பிராந்திய சபை என்றும் குறிப்பிட்டப்பட்டுள்ளது. இது சிங்கள மக்களை தவறான வழிக்கு இட்டுச் செல்லும் முயற்சியாகும்.''

இப்படிக் கூறுகிறார் பேராசிரியர் நளின் டி. சில்வா.

சட்டவரைவு குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது:

தீர்வுயோசனையின் ஆரம்ப பிரிவில், சுதந்திரமான இறைமையும், ஐக்கியமும் கொண்ட தேசமொன்றை தொடர்ந்து கட்டிக்காப்பதற்கு மக்களால் வழங்கப்படுகின்ற பங்களிப்பு மெச்சத்தக்கது என்று கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு கூறுவதன் மூலம் சிங்கள மக்களின் கண்ணில் மண்ணைத் தூவ முயற்சி எடுத்திருப்பது தெளிவாகின்றது.

இந்த யோசனை மூலம் பிராந்தியசபைகளை ஏற்படுத்தி இந்நாட்டின் இறைமையை சீர்குலைக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

இது தமிழ் இனவாதக் கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பரிசாகும்.—

—இப்படி அவர் மேலும் னார். (இ-3)

# ஒருதொகுதி தபால்களுடன் 'லங்கா முடித' இன்று வரும்

## ஹபரணவும் வந்து சேரும்

சாவகச்சேரி, ஜன. 21

காங்கேசன்துறைக்கு நேற்று வந்து சேர்ந்த 'லங்கா முடித' கப்பல் இன்று காலை பருத்தித்துறைக்கு வரவிருக்கிறது.

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணப் பொருள்களுடன் ஒருதொகுதி தபால் பொதிகளும் இக்கப்பலில் எடுத்து வரப்படுகின்றன.

தபால் பொதிகளை இன்றே இறக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன—

இதேவேளை— அரச சார்பற்ற அமைப்புக்களுக்குரிய நிவாரணப் பொருள்களுடன் 'ஹபரண' கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வருகின்றது. (உ-3-173-15)

# சோனியா பிரதமராவார்; ஜெயலலிதா சரிவார்

## பிரபல சோதிட சஞ்சிகை ஆரூடம்

கொழும்பு, ஜன. 21

எதிர்வரும் ஏப்பிரல் மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவியான சோனியாகாந்தி இந்தியாவின் புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்படுவார் என்றும்—

தற்போதைய பிரதமர் நரசிம்மராவுக்கு பிரதமர் பதவி கிட்டாமற்போகும் எனவும்—

இந்தியாவிலுள்ள பிரபல சோதிட நிபுணரான பி. வி. ராமனால் வெளியிடப்படும் ''அஸ்ட்ரோலோஜிக்கல் மகஸின்'' என்ற சோதிட சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரதீய ஜனதாக் கட்சி அடுத்த பொதுத் தேர்தலில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெறும் எனவும்—

அதேவேளை ஜனதா தள் கட்சி படுதோல்வியடையும் என்றும் — தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கும் நடைபெறவுள்ள தேர்தல் சாதகமாக அமையாது என்றும்—

அச்சஞ்சிகை மேலும் தெரிவிக்கிறது. (உ-10)

### கனகாம்பிகை அம்பாள் கும்பாபிஷேகம்

கிளிநொச்சி, ஜன. 21

இரணைமடு கனகாம்பிகை அம்பாள் திருக்கோயில் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் (குடமுழுக்க) எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 10-30க்கு நடைபெறவிருக்கிறது.

நாட்டு நிலைமையைக் கருத்தில் கொண்டு எளிமையான முறையிலும், சிக்கனமாகவும் இக்கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதாக ஆலய அறக்காவலர் சபைத் தலைவர் திரு. நா. சோதிநாதன் தெரிவித்தார்.

சிவஸ்ரீ ராம். கெங்காதரக் குருக்கள் பிரதம குருவாக இருந்து நடத்தி வைக்கும் இக்கும்பாபிஷேக விழாவின் கிரியைகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவிருக்கின்றன. (இ-3)

### வெறிச்சோடிக் கிடக்கிறது

வடமராட்சி, ஜன. 19

புதனன்று ஸ்ரீலங்காப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களை அடுத்து வல்வெட்டித்துறைப் பகுதி வெறிச் சோடிக்காணப்படுகிறது. (இ-173-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### வன்னிக்கு நிவாரணப் பொருள்களை அனுப்பும் விவகாரம்:

# அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தை இனி ஸ்ரீலங்கா அரசாங்கமே தேடி வர வேண்டும்!

## ஐ. நா. சிரேஷ்ட பிரதிநிதி திட்டவட்டமாகத் தெரிவிப்பு

வன்னிப் பிரதேசத்துக்கு உணவு தவிர்ந்த ஏனைய நிவாரணப் பொருள்களை அனுப்பும் விடயத்தில் இனி மேல் ஸ்ரீலங்கா அரசுதான் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தைத் தேடி வர வேண்டும். இந்த விடயத்தில் இனி மேல் ஸ்ரீலங்கா அரசைத் தேடிச் சென்று அழுத்தம் கொடுக்கும் நிலையில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் இல்லை

— இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் ஸ்ரீலங்காவுக்கான சிரேஷ்ட பிரதிநிதி பீற்றர் மேயர்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் தொலைத் தொடர்புக் கருவி ஒன்றை கிளிநொச்சியில் பொருத்துவது தொடர்பாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்ட கெடுபிடி நடவடிக்கைகளை அடுத்து வன்னிக்கு நிவாரணப் பொருள்களை எடுத்து வரும் பணியை ஐ நா. தூதரகம் இடைநிறுத்தியது தெரிந்ததே.

இது தொடர்பாக பீற்றர் மேயர் கொழும்பில் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கான — உணவுப் பொருள்கள் தவிர்ந்த நிவாரணப் பொருள்களை — அங்கே எடுத்துச் செல்வதற்கான உதவியை ஸ்ரீலங்கா அரசு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்திடம் கடந்த வாரம் கோரியது.

அரசாங்கத்தின் கோரிக்கையின் அடிப்படையில் சில வாகன அணிகளில் பொருள்கள் வடக்கே எடுத்துச் செல்ப்பட்டாலும்—

தற்போது சுங்கப் பகுதியில் தடுத்து வைக் கப்பட்டுள்ள— அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்திற்குரிய- சில தொலைத் தொடர்புக் கருவிகள் விடுவிக்கப்படாததால் தொடர்ந்து வடக்கே பொருள்கள் எடுத்துச்செல்லப்படுவது தடைப்பட்டுள்ளது.

மேற்படி தொலைத் தொடர்பு கருவியை வன்னியில் பொருத்த அனுமதிப்பது என்ற புரிந்துணர்வின் அடிப்படையிலேயே அரசின் கோரிக்கை எம்மால் ஏற்கப்பட்டது.

தற்போது பாதுகாப்பு அமைச்சு அந்தக் கருவிகளை அனுமதிப்பதைத் தடுத்து வருகின்றது. எம்மைப் பொறுத்தவரை அது ஸ்ரீலங்கா அரசின் உள்விடயம்.

நான் கடந்த டிசம்பர் முதல் இந்தக் கருவியை விடுவித்து பெற்றுக்கொள்வதற்கு முயற்சி எடுத்து வந்துள்ளேன்.

அதனை எடுத்துச் செல்வதற்கு எனக்கு அனுமதி வழங்கும் கடிதத்தை அமைச்சு வழங்கியிருந்த போதிலும் செயல் நடவடிக்கையில் அதனைச் செயற்படுத்துவதற்கு தடைகள் காணப்படுகின்றன.

பாதுகாப்பு அமைச்சு, வெளிவிகார அமைச்சு ஆகியவற்றுக்கும் இது குறித்து கடிதம் எழுதியுள்ளேன். ஆனால் இதுவரை பதில் ஏதும் இல்லை.

மீண்டும் ஒரு கோரிக்கைக் கடிதத்தை எழுதித் தரும்படி பாதுகாப்பு அமைச்சு என்னைப் பணித்துள்ளது. அதன்படி ஒரு கடிதம் அனுப்பியுள்ளேன். அதே சமயம் வடபகுதிக்கு புனர்வாழ்வுப் பொருள்களை அனுப்புவதை இடைநிறுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா அரசு தான் எம்மிடம் உதவி கோரி வந்தது; நாம் அவர்களிடம் உதவி கோரிச் செல்லவில்லை.

எனவே, மோதல் பிரதேசங்களில் ஐ. நா. அதிகாரிகளை பணிபுரிய வைப்பது தொடர்பான ஒழுங்கு விதிகளுக்கு ஸ்ரீலங்கா அரசு கட்டுப்பட்டே ஆகவேண்டும்.

மோதல் பிரதேசங்களில் ஒழுங்கு முறையான தொலைத் தொடர்பு கருவிகள் பொருத்தப்பட்டால் மட்டுமே ஐ. நா. அதிகாரிகளை அங்கு பணிபுரிய அனுமதிக்க முடியும் என்பது ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஒரு கட்டாய விதியாகும்.

எனவே இந்தக் கருவிகளைப் பொருத்தும் வரை வடக்கில் எமது அதிகாரிகளின் எண்ணிக்கையை நாம் உயர்த்த முடியாது.

இனிமேல் இந்த விடயங்களை தொடர்ந்து நகர்த்துவதற்கு ஸ்ரீலங்கா அரசுதான் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தைத் தேடி வர வேண்டும். நாம் ஸ்ரீலங்கா அரசுக்கு இனிமேல் இந்த விடயத்தில் அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடமாட்டோம்— என்றார் பீற்றர் மேயர்.

இந்த விவகாரம் குறித்து அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் மற்றொரு அதிகாரி கூறியதாவது:-

கிளிநொச்சியில் தொலைத் தொடர்பு சாதனங்களைப் பொருத்துவதற்குத் தேவையான — பெறுமதியான— கருவிகளுடன் தொழில்நுட்பவியலாளர்களும் ஜெனிவாவில் இருந்து கொழும்பு வந்துள்ளார்கள்.

இக்கருவிகளை எடுத்துச் சென்று கிளிநொச்சியில் பொருத்த பாதுகாப்பு அமைச்சு செயலாளர் அனுமதி வழங்கியுள்ளார். ஆனால் இராணுவத்தினர் அனுமதிக்கிறார்கள் இல்லை.

புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் மடு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள அலுவலகங்களில் ஏற்கனவே இரு தொலைத் தொடர்பு நிலையங்களை அமைத்துள்ளோம். கிளிநொச்சியில் மட்டும் ஒரு நிலையத்தை அமைக்க ஏன் அனுமதியளிக்கிறார்கள் இல்லை?

எமது அமைப்பின் வேலைப் பளுவைக் குறைப்பதற்காகவே நாம் தொலைத் தொடர்பை ஏற்படுத்துகிறோம். வேறு யாரும் இதனைத் பயன்படுத்தவதில்லை.

இந்த விவகாரம் குறித்து அரசாங்கம் நல்லதொரு முடிவை வெகுவிரைவில் தருமென நாம் எதிர்பார்க்கிறோம். அதனைப் பொறுத்தே எமது செயற்பாடுகள் இருக்கும் — என்றார் அவர். (உ-3)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

21 — 01 — 1996

இரவு

- ★ 8. 02 — வாழ்வின் கோலங்கள்.
- ★ 8. 20 வரலாறு சொல்லும் பாடம்.
- ★ 8. 30 — செய்திகள்.
- ★ 8. 40 — அறிவிப்புகள் — தொடர்ந்து 9. 00 மணி வரை தாயகப்பாடல்கள்

22 — 01 — 1996

காலை

- ★ 7. 02 —மாவீரர்வணக்கம்
- ★ 7 10 — மணியாரம்.
- ★ 7. 30 — செய்திகள்
- ★ 7. 35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45 — அறிவிப்புகள் - தொடர்ந்து 8-00 மணி வரை தாயகப்பாடல்கள்

# பட்டதாரிப் பயிலுநர் கொடுப்பனவு நிறுத்தம்

சாவகச்சேரி, ஜன. 21

யாழ். மாட்டத்தில் உள்ள பாடசாலைகளில் பட்டதாரி பயிலுநர்களாக பணியாற்றுவோருக்கான கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளன என்று கல்வித் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொள்கை திட்டமிடல் அமைச்சினால் பட்டதாரிகளுக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டப்பாடசாலைகளில் நியமனம் பெற்று பயிற்சியை மேற்கொண்டிருந்த பயிலுநர்களுக்கான கொடுப்பனவு கடந்த டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டுள்ளதாக கொள்கை திட்டமிடல் அமைச்சு கல்வித் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளது.

இதன்படி வேலை இழக்கும் இவர்களுக்கு நியமனம் வழங்குவது பற்றி அரசு எந்தவித அறிவிப்பையும் வெளியிடவில்லை. (இ-3)

### அரச, கூட்டுத்தாபன பதவிகளுக்கு ஆள் சேர்ப்பு

# போட்டிப்பரீட்சை பெறுபேறுகள் கிளிநொச்சிச் செயலகத்தில்

சாவகச்சேரி, ஜன. 21

அரசாங்க எழுதுநர் பதவிகள் அதையொத்த சேவைகளில் உள்ள பதவிகள் மற்றும் அரச கூட்டுத்தாபன எழுதுநர் பதவிகள் ஆகியவற்றுக்கு 94/95 ஆண்டுக்கான ஆள் சேர்ப்பு போட்டி பரீட்சையின் பெறுபேறுகள் கிளிநொச்சி செயலகத்துக்குக் கிடைத்துள்ளன.

இப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கான திகதி கடந்த 13ஆம் திகதி என்று தெரிவிக்கப்பட்ட போதிலும தற்போதைய தபால் சேவையில் இருந்துவரும் தாமதம் காரணமாக வேறொரு திகதியில் நேர்முகப் பரீட்சையை நடத்த ஏற்பாடாகியுள்ளது.

இதற்கு வசதியாக நேர்முகப் பரீட்சைக்கு தெரிவாகியுள்ளவர்களை தமது முகவரியை பொது நிர்வாக அமைச்சுக்கும், அந்த அந்த மாவட்ட அரச அதிபர்களுக்கும் உடன் அறிவிக்குமாறு கிளிநொச்சி அரச அதிபர் திரு. எஸ். தில்லைநடராஜா கோரியுள்ளார்.

பெரும்பாலும் இந்த நேர்முகப் பரீட்சைகள் வவுனியாவில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெறுபேறு கிடைத்தோர் விவரம் வருமாறு:

*யாழ்ப்பாணம்*

கே. சுதாகரன் (நீர்வேலி), என். மகாலட்சுமி [அரியாலை], எஸ். குகதாஸ் [கோப்பாய்], பி. அனுசன் [யாழ்ப்பாணம்], பி. சுகந்தி [சுதுமலை வடக்கு], கெ. சிவசுதன் [கரணவாய் தெற்கு], என். கமலாநந்தினி [மந்துவில் கிழக்கு], ரி. பவானி [மானிப்பாய்], எஸ். ரகுராம் [இணுவில்], வி. நந்தினி [துன்னாலை மத்தி],பி.கௌசல்யா [கோப்பாய் தெற்கு], கே சிரலதன் [திருநெல்வேலி], என்' ஜெயலலிதா [சங்கானை], எஸ். சிவகுமாரன் [அம்பனை], பி. மகாலிங்கசிவம் [கொக்குவில் மேற்கு], என். சந்திரவதனி [நெல்லியடி], எம். மைதிலி [யாழ்ப்பாணம்], என். மோகனாம்பிகை [கோப்பாய் வடக்கு], ஜி. சுகுணவதனி [அராலி தெற்கு), கே.ரனிஸ் [அல்வாய் கிழக்கு], எம். முரளி [பருத்தித்துறை], வி. எஸ்.தேவநந்தினி [மறவன்புலம்), ஏ. சிறில் (திருகோணமலை), பி. கவிதா[நல்லூர்], ஜி. நிர்மலாதேவி [பருத்தித்துறை].

*கிளிநொச்சி மாவட்டம்*

கே. சுதர்ணதேவி (ஜெயந்தி நகர்), எஸ். சக்தி (ஆனந்தபுரம்), பி, தேவமனோகரன் (திருநகர்).

*முல்லைத்தீவு மாவட்டம்*

கே. உமா(முள்ளியவளை), எஸ். நிவேதா (முள்ளியவளை), ஆர். அருள்செல்வி (முள்ளியவளை).

*மன்னார் மாவட்டம்*

ஜி. தேவசீலன் (மன்னார்), எஸ். ஜே. பிரகஸ்பதி (மன்னார்), ஜி. தேவநந்தி (மன்னார்), ஏ. ஜி. மெரினா (புத்தளம்).

*வவுனியா மாவட்டம்*

ஏ. லோஜினி (பொன் தோட்டம்), கே. சந்திரபிரபா (வவுனியா), எஸ். அருந்ததி (வவுனியா).

## வெட்கம், மானம் இல்லையா?

தமிழர் மண்ணை தமிழர் கண்முன்
சண்டிப் பகைவர் ஆள்வதா?
சாவுக் கஞ்சி அவர்கள் காலில்
தாழ நாங்கள் நாய்களா?

மானம் இழந்த அடிமை யாகி
மனிதன் மண்ணில் வாழ்வதா;
தானை நடத்தி களத்தில் வீழ்ந்தால்
சாலப் பழிகள் சூழுமா?

வீரர் பலராய் எதிர்த்தா லன்றி
வெய்ய பகைவர் தொலைவரா?
வேறாய் நிற்கும் தமிழர் யார்க்கும்
வெட்கம், மானம் இல்லையா?

உற்ற இன்னல் தொலைக்கும் வழியில்
உழைத்தல் கடமை அல்லவா?
ஒட்டு மொத்த மாக நாங்கள்
உலைந்து சாதல் நல்லதா?

உரிமை வேண்டாம் இருப்பேன் என்னும்
ஒருவன் உண்மை மனிதனா?
உளறும் அந்தப் பேதை வாழ
உரிமை மக்கள் விடுவரா?

ஈழம் மீட்க இறந்த வீரர்
ஈகை வீணாய்ப் போவதா?
நாளை விடியும் இன்னல் என்று
நம்பிக் களத்தில் ஏகுவீர்!

- பண்டிதர் வீ பரந்தாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு தேவை

பருத்தித்துறையில் வீடு வாடகைக்குத் தேவை. வாடகை முற்பணம் கொடுக்கப்படும். தொடர்புகொள்ளவும். சிவகுமரன் பிடவை மாளிகை, பருத்தித்துறை. (40081)

### மணப்பெண் தேவை

பிரான்சில் வதியும் 33 வயது, மகம் முதலாம் பாகம், வடமராட்சியைச் சேர்ந்தவருக்கு நல்ல நிறமும், அழகும் உள்ள நற்குடியில் பிறந்த மணப்பெண் தேவை. செவ்வாய்க்குற்றம் இல்லை. கிரகபாவம் நாலு. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். இல. 101, மே/பா உதயன், பருத்தித்துறை. (40080)

### தவறிவிட்டது

செல்வராஜா மேரிஸ் டெலாவின் அடையாள அட்டை இல. 747601364V மிருசுவில் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மிருசுவில் உபதபாற்கந்தோரில் அல்லது திருவள்ளுவர் களஞ்சியம், கொடிகாமத்தில் ஒப்படைத்து உதவவும். நன்றி. (40085)

சு. இராவீந்திரக்குமாரன் ஆகிய எனது பேஸ், காசு, நகைகள் சாவகச்சேரியில் இருந்து பருத்தித்துறைக்கு வரும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி புனர்வாழ்வுப் பகுதியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [39983]

### அறை தேவை

யாழ். பல்கலைக்கழக ஊழியர் உட்பட இரு ஆண்களுக்கு தென்மராட்சியில் அறை வாடகைக்கு தேவை விவரங்களுடன் தொடர்பு கொள்க. மே/பா உதயன், இல. 521. (40200)

### தேவை

எமது வாணிப நிலையத்திற்கு பீடி, அப்பளம், ஊதுபத்தி, பற்பொடி தயாரிக்கக் கூடியவர்களும், பன்ன வேலை தெரிந்தவர்களும் தேவை. தங்குமிட வசதி உண்டு. விண்ணப்பிக்கவும். இல. 519, மே/பா உதயன், சரசாலை. (40195)

ஜாம் போத்தல்கள் தேவை. ஹார்லிக்ஸ் / வீவா (பெரிது), ஜாம் போத்தல்களை கிருயோன் கூல்பார், ராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ், ஸ்ரீவிக்னேஸ்வரா (S. V. S.) சாவகச்சேரியில் ஒப்படைத்துப் பணத்தைப் பெற்றுக் கொள்ளவும். ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட். (சி-3164)

### புத்தாண்டுப் பலன்கள்

16-2-96 சனி மாற்றமும் 25-12-96 வரை வியாழ மாற்ற பலன்களும் ரூபா 10/- எங்கும் கிடைக்கும். (கணிப்பு — சத்யா) பாடசாலை, அலுவலக உபகரணங்களுக்கு மொடர்ன் ஸ்ரோர்ஸ், நெல்லியடிச் சந்தி. (39975)

# ஸ்ரீலங்காவின் சுதந்திர தினத்தன்று படையினருக்கு "ரிவிரச" பதக்கம்

கொழும்பு, ஜன. 21

''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையின் போது ஆர்வத்துடன் போரிட்ட படை அதிகாரிகளுக்கும் படை வீரர்களுக்கும் ''ரிவிரச'' சூரியப் பிரகாசம்)பதக்கம் வழங்கப்பட உள்ளதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கிடையில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட ''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையின்போது பதில் படைத் தளபதியாக கடமையாற்றிய பிரிகேடியர் சரத் பொன்சேகா வெலிகந்தை இராணுவ முகாமின் கட்டளை அதிகாரியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

பிரிகேடியர் நீல் டயசின் தலைமையில் யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதியூடாக யாழ். நகரைச் சென்றடைந்த படைப் பிரிவின் இரண்டாவது தளபதியாக இவர் பணியாற்றினார் என தெரிவிக்கப்படுகிறது.

இவர் பணியாற்றிய படைப் பிரிவே தற்போது யாழ்ப்பாணத்துக்கும் பலாலி இராணுவ முகாமிற்கும் இடைப்பட்ட பிரதேசத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பாகவுள்ளதாம்.

இராணுவ வட்டாரச் செய்திகளின்படி பிரிகேடியர் பொன்சேகா ஏற்கனவே வெலிக்கந்தை இராணுவ முகாமில் தனது பணிகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

# இடம்பெயர்ந்த மாணவர்களை பதிவு செய்தல்

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது வன்னிப் பெருநிலப்பரப்பு, தென்மராட்சி, வடமராட்சியில் வசிக்கும் மாணவர் அனைவரும் தமக்கு அண்மையில் உள்ள பாடசாலையில் கீழ் வரும் விவரங்களைப் பதிவுசெய்து கொள்ளவேண்டும்.

மாணவர் பற்றியது;

01. மாணவர் முழுப்பெயர்:
02. பிறந்த திகதி:
03. பால்:
04. கல்வி கற்கும் ஆண்டு:
05. முன்னைய பாடசாலையின் பெயர்:
06. தற்போதைய முகவரி:
07. கிராமசேவையாளர் பிரிவு:

இவ் விவரங்கள் அவர்களது கல்வி தொடர்பான நடவடிக்கைகளுக்கு உடனடியாகத் தேவையானபடியால் 24 - 01 - 1996 ற்கு முன் பதிவுகளை நிறைவு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பாடசாலை அதிபர்கள் இவ்விவரங்களை வகுப்பு என்பன அடங்கக் கூடியதாக 26 - 01 - 1996 ற்கு முன் கோட்டக் கல்விப் பணிமனையில் ஒப்படைக்கவும்.

இது தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையின் கல்வி நடவடிக்கைக் குழுவின் கோரிக்கை.

பொ. விநாயமூர்த்தி
தலைவர்

தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை,
நடுவப் பணியகம்,

(சி-3174)

பரீட்சை எழுதும்

## பல்கலை. மாணவருக்காக நூலகங்கள் இயங்குகின்றன

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விஞ்ஞானமாணி இறுதிப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நன்மை கருதி ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, டிறிபேக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் நூலகங்கள் தொடர்ந்து இயங்கி வருகின்றன. (இ-7-15)

# வெலிகந்தையிலிருந்து மேலதிக துருப்புகள்

## மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டன

மட்டக்களப்பில் இராணுவத்தினர் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கைக்கு உதவியாக மேலதிக துருப்புக்கள் வெலிகந்தையில் இருந்து அனுப்பப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

செங்கலடி — பதுளை வீதி வழியாக நடவடிக்கை மேற்கொள்ளும் படைனருக்கு உதவியாக இத்துருப்புக்கள் வாகரைக்கு அனுப்பப்படுகின்றன.

கவசவாகனங்கள் சகிதம் இந்த அணி சென்றதாக தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## மீன்பிடி தொழில் மந்த நிலையில்

நாகர்கோவில் பகுதியில் மீன் பிடித்தொழில் மந்த நிலையடைந்துள்ளது.

இப்பகுதியில் உள்ள மீனவர்களில் பெரும்பாலானவர்கள் வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ளதே இதற்குச் காரணம் என்று கூறப்படுகிறது. (இ-111)

## சிசு மரணம்

செப்ரிசீமியா நோயினால் 8 மாதக் குழந்தை ஒன்று மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் மரணமானது. (இ-173)

# வாகரையில் குண்டுவீச்சு; 5 அப்பாவித் தமிழர் பலி

மட்டக்களப்பு, ஜன. 4

மட்டக்களப்பு பகுதியில் வாகரையில் குண்டு வீச்சுக்கள் பரவலாக இடம்பெறுகின்றன.

கடந்த புதன்கிழமை இரவு நடந்த குண்டு வீச்சில் ஐந்து பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று தமிழ் எம்.பி ஒருவர் தெரிவித்துள்ளனர்.

அப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அகோர ஷெல் தாக்குதலால் மக்களின் உடைமைகள் நாசமாகியுள்ளன.

இராணுவ நடவடிக்கை காரணமாக பன்குடாவெளி, இலுப்படிச் சேனை, வேப்பவெட்டுவான், உன்னிச்சை, உறுகாமம் பகுதிகளில் இருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்து செங்கலடி, வந்தாறுமூலை, வாழைச்சேனை பகுதிகளில் உள்ள நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர். (இ-3)

## பஸ்களை பயன்படுத்தும் படையினர்

மட்டக்களப்பு, ஜன. 21

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் ஆரம்பித்துள்ள இராணுவ நடவடிக்கைக்காக படையினர் இ. போ. ச. பஸ்களையும் பயன்படுத்தி வருகின்றனர்.

20க்கு மேற்பட்ட பஸ்களை படையினர் எடுத்ததால் பயணிகளுக்கான தூர பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# கண்ணீர் அஞ்சலி

வேலணை கிழக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும் இலங்கை மின்சார சபை மத்திய மின் நிலையத்தில் பணிபுரியும்

திரு. முருகேசு சுந்தரம்
அவர்களின் அன்புத் தாயாருமான

## திருமதி முருகேசு அமிர்தம்மா

அவர்களது மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
மத்திய மின் நிலையம்,
சுன்னாகம்.

(40088)


கிளிநொச்சியில்



# சுவர்ணா நகை அகம்



எமது ஸ்தாபனம் கிளிநொச்சி — யாழ். வீதியில் — நீதிமன்றம் முன்பாக — இயங்கத் தொடங்கியுள்ளது என்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

மங்கையர் மனங்கவரும் அழகிய டிசைன்களில்
22 கரட் தங்க நகைகளுக்கு
புதிய புதிய டிசைன்களில் உங்கள் தேவைக்கேற்ற வண்ணம்
தங்க நகைகளை பெற்றுக்கொள்ள எங்களை நாடுங்கள்.

மங்கள நிகழ்வுகளுக்கு உரிய நேரத்தில் நகைகள் செய்துகொடுக்கப்படும்.

## சுவர்ணா நகை அகம்

யாழ். வீதி, கிளிநொச்சி.

(சி/3175)


# விசேட பொதுச் சபைக் கூட்ட அழைப்பு

அன்புடையீர்!

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் இன்று (**21-01-1996**) மு. ப. 10. 00 மணிக்கு, கொடிகாமம் திருநாவுக்கரவு வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்து, மருந்தகங்கள் நடத்தாதவர்களும் இக் கூட்டத்தின் முக்கியத்துவம் உணர்ந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

செயலாளர்

(40206

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## புண்ணும் புனுகும்

அரசாங்கப் படைகள் கிழக்கில்— மட்டக்களப்பில்— பெரிய அளவிலான இராணுவத் தாக்குதலை ஆரம்பித்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்தும், அதனைச் சூழவுள்ள காட்டுப் பிரதேசங்களில் இருந்தும் விடுதலைப் புலிகளை ஒழிப்பதே ''ரிவிகிரண'' எனப்படும் சூரிய ஒளிக்கற்றை இராணுவ நடவடிக்கையின் நோக்கம் என்று படைத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத் தாக்குதலின் போது செய்தது போலவே, அதிக எண்ணிக்கையான படையினரைப் பயன்படுத்தி பல முனைகளால் சென்று தாக்குதல் நடத்தும் உத்தியையே படையினர் இங்கும் நடைமுறைப் படுத்துகின்றனர்.

எனினும் அரசாங்கப் படைகள் நினைப்பது போல, கிழக்கிலிருந்து விடுதலைப் புலிகளை ஒழிப்பதுஎன்ன,விரட்டுவதே கஷ்டமான, இயலாத காரியம் என்று இராணுவ ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

வடக்கைப் போலவே, மட்டக்களப்பின் மொத்த நிலப் பரப்பில் கூடிய விஸ்தாரமுள்ள படுவான்கரைப் பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

அந்தப் பிரதேசத்தில் சிவில் நிர்வாகத்தை நடத்தும் அளவுக்கு விடுதலைப் புலிகள் அங்கு பலமடைந்திருப்பதால் அரசாங்கம் நினைப்பது போல அவர்களை இலகுவில் தோற்கடித்து விட முடியாது

இந்த வகையில் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கை விடுதலைப் புலிகளை பலவீனப் படுத்துவதற்குப் பதிலாக தமிழ்,முஸ்லிம் பொது மக்களைக் கொன்று குவிக்கவும், மிகப் பெரும் எண்ணிக்கையில் ஏதிலிகளாக இடம்பெயரச் செய்யவுமே உதவும் எனலாம்.

மக்கள் குடியிருப்புக்கள் மீதான விமானக் குண்டு வீச்சுக்கள், எறிகனை வீச்சுக்கள் என்பன வடக்கு நிலையையே அங்கும் உருவாக்கப் போகிறன.

இதனைச் சரியாக மதிப்பிட்டே, கிழக்கில் அகதிகள் பிரச்சினை ஏற்படும் என்றும், அங்குள்ள மக்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை விநியோகிப்பதில் சிக்கல் நிலை தோன்றலாம் என்றும் நிவாரணப் பணியாளர்கள் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு படையினர் வாகரைப் பிரதேசத்தில் நடத்திய விமானக் குண்டு வீச்சில் ஐந்து பொது மக்கள் கொல்லப்பட்டதும் —

ஏறாவூர்ப் பற்று மக்கள் இடம் பெயர்ந்துள்ளமையும் —முன்னர் கூறிய நிலை உண்டாகும் என்பதற்குக் கட்டியம் கூறுவனவாக உள்ளன.

வடக்கில் மக்களுக்கு உயிர், உடைமைச் சேதங்களை உண்டாக்கி, அவர்களை இலட்சக் கணக்கில் இடம் பெயரச் செய்து அவர்தம் வாழ்க்கையை சீரழித்துள்ளது போல—

கிழக்குத் தமிழர்களின் வாழ்க்கையையும் சீரழிப்பதற்கே அரச படைகள் அங்கு தொடங்கியுள்ள இராணுவ நடவடிக்கை வகை செய்யும்.

இப்படியிருக்க தமிழர்களை அல்லற்படுத்தும் இராணுவ அநியாயத்தை வெளி உலகத்துக்கு மறைப்பதற்காக, அந்தப் புண் மணக்காமல் இருப்பதற்காகவே அதிகாரப் பரவல் தீர்வுத் திட்டம் என்ற புனுகு பூசியிருக்கிறார் சந்திரிகா!

# பேராதனை பல்கலை. பொறியியல்துறைப்பரீட்சை: தமிழ் மாணவர்களுக்கு திறமையான பெறுபேறுகள்

பேராதனை பல்கலைக் கழக பொறியியல் துறை பரீட்சை முடிவுகள் சில அண்மையில் வெளியாகியுள்ளன. அவற்றில் தமிழ் மாணவர்கள் திறமையான பெறுபேறுகளைப் பெற்றிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது. அவற்றுள் சிலவற்றின் விவரம் கிடைத்துள்ளது. அவை வருமாறு:-

### 2ஆம் வருடம்

இறுதி — பகுதி I (இரண்டாம் வருட) பரீட்சை முடிவுகளில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வசீகரன் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் குழுவில் முதலிடம் பெற்றிருக்கின்றார்.

ஐந்து பாடங்களில் 'ஏ' சித்தி பெற்றோர் எட்டுப் பேர். அவர்கள் அனைவரும் தமிழர்கள் ஆவர்.

அவர்களின் விவரம் வருமாறு: –

வசீகரன், அமரர் பேராசிரியர் துரைராஜாவின் மகள் அகிலா, ரவிச்சந்திரன், அன்பழகன், அற்புதராஜா, சக்திவேல், ரவீந்திரா, சத்தியசீலன்.

மேற்படி பரீட்சையில் முதலாம் வகுப்பில் சித்தியடைந்துள்ள 28 பேரில் 22 பேர் தமிழர்கள்.

இதேபோல இரண்டாம் பிரிவு மேல் நிலை, இரண்டாம் பிரிவு கீழ் நிலை பெற்ற மாணவர்களில் 80 வீதமானோர் தமிழர்

மேற்படி இரண்டாம் வருட மாணவர் அணியில் மொத்த மாணவர் எண்ணிக்கை 320. அதில் தமிழ் மாணவர்கள் 110 பேர். அவர்களில் 105 பேர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். இந்த 105 மாணவர்களிலும பெரும்பாலானோர் முதலாம், இரண்டாம் வகுப்புகளில் சித்திபெற்றுள்ளனர்.

### மூன்றாம் வருட பரீட்சை

பொறியியல் பீட 3ஆம் வருடப் பரீட்சையிலும் தமிழ் மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

மொத்தம் 250 பேரைக் கொண்ட இந்த மாணவர் அணியில் தமிழ் மாணவர்கள் 80 பேர்.

முழு மாணவர் அணியிலும் பரீட்சையில் முதலாம் இடத்தை திருகோணமலையைச் சேர்ந்த இராமலிங்கம் என்ற மாணவர் பெற்றுள்ளார்.

இந்த அணியில் உள்ள மாணவர்கள் ஐந்து பிரிவுகளில் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

I. சிவில்:- இந்தத் துறையில் ஆறு பேர் முதலாம் வகுப்பில் சித்தியடைந்துள்ளனர். அவர்களில் ஐவர் தமிழர்கள். ஆறாவது நபர் சிங்களவர். அந்த ஐந்து தமிழ் மாணவர்களின் விவரம் வருமாறு:-

இராமலிங்கம் (திருகோணமலை), நவக்குமார் (வவுனியா), திருவருள்செல்வன் (முல்லைத்தீவு), குலசிங்கம் (யாழ்ப்பாணம்), சிவராஜன் (நெல்லியடி).

II மின் மற்றும் இலத்திரனியல் — இந்தத்துறையில் மட்டக்களப்பைச் சேர்ந்த நவேந்திரா என்ற மாணவர் மட்டும் முதலாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளார்.

அறுபது மாணவர்களைக் கொண்ட இந்தப் பிரிவில் அரைவாசிப் பேர் தமிழர்கள். அந்த அரைவாசிப் பேரில் நான்கு தமிழர்கள் பரீட்சையில் சித்தியடையவில்லை. எஞ்சிய அரைவாசி சிங்களவரில் ஐம்பது வீதமானோர் பரீட்சையில் கோட்டை விட்டுள்ளனர்.

13 மாணவர்களுக்கு இரண்டாம் கீழ் நிலை கிடைத்துள்ளது. அவர்கள் அனைவரும் தமிழராவர்.

மின் மற்றும் இலத்திரனியல் பிரிவைப் பொறுத்தவரை இது ஒரு சிறப்புப் பெறுபேறு என்பது குறிப்பிடத் தக்கது.

III. உற்பத்திப் பொறியியல் பிரிவு;- இந்தப் பிரிவில் தமிழ் மாணவர்கள் நூறு வீத சித்தி பெற்றுள்ளனர்.

IV, V இயந்திர பொறியியல், இரசாயான பொறியியல்;- இந்தப் பிரிவுகளில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் எண்ணிக்கை மிகக் மிகக் குறைவு.

### இறுதியாண்டு

சிவில் பிரிவில் குகரூபன், தவகுமார், குணசேகரம் ஆகிய மாணவர்கள் இரண்டாம் மேல்நிலை வகுப்பில் சித்தியடைந்துள்ளனர்.

உற்பத்திப் பொறியியல் பிரிவில் செந்தூரன் என்ற மாணவனும்—

இயந்திரப் பொறியியல் பிரிவில் இளம்செல்வி என்ற மாணவியும்—

முதலாம் வகுப்பில் சித்தியடைந்துள்ளனர்.

மின் மற்றும் இலத்திரனியல் பிரிவில் நிலாவழகன், நவேந்திரன் ஆகிய இருவர் மட்டும் முதலாம் வகுப்பில் சித்தியடைந்துள்ளனர்

பொறியியல் பீடத்தின் நடப்பு ஆண்டுக்கான சிறந்த மாணவனுக்கான தங்கப்பதக்கம் இந்த இரண்டு பேருக்கும் வழங்கப்படவிருக்கின்றன.

இந்தப் பிரிவில் மூவர் இரண்டாம் மேல் நிலை வகுப்பில் சித்தியடைந்துள்ளனர் அவகளில இருவர் தமிழ் மாணவர்களாவர்.

(உ-ரி)

## பல்கலைக்கழக மாணவருக்கு

யாழ் பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களுக்குமான முக்கிய ஒன்றுகூடல்நிகழ்வுஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## ஒய்வூதிய வவுச்சர்கள் தொடர்பான நடைமுறை

சாவகச்சேரி, ஜன. 21

கடந்த மாத ஓய்வூதியத்தைப் பெறாத ஓய்வூதியர்களின் வவுச்சர்கள் தொடர்பாக கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகள் குறித்து செயலக ஓய்வூதியப் பிரிவு கணக்காளர் திரு. கா. வீரசிங்கம் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: -

★ யாழ் மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சியில் இயங்குகின்ற வங்கிகளில் ஓய்வூதியம் பெறுபவர்களில் இதுவரை 95 டிசம்பர் மாத ஓய்வூதிய வவுச்சர்களைப் பெறாதவர்களினது வவுச்சர்கள் தற்போது அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. எனவே சம்பந்தப்பட்ட ஓய்வூதியர்கள் தென்மராட்சியில் இடம்பெயர்ந்து இயங்குகின்ற வங்கிகளுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

★ யாழ்ப்பா[illegible] இயங்கி தற்பொ[illegible] ராட்சியில் இடம்பெயர்ந்து இயங்குகின்ற யாழ்ப்பாணம்— இலங்கைவங்கி, கொமேர்ஷல் வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி ஆகிய வங்கிகளில் ஓய்வூதியம் பெறுபவர்களில் இதுவரை 95 டிசம்பர் மாத ஓய்வூதிய வவுச்சர்களை பெற்றுக் கொள்ளாதவர்களது ஓய்வூதிய வவுச்சர்கள் தற்போது சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ் கச்சேரியில் வைத்து வழங்கப்படுகிறது

★ இந்த வங்கிகளில் ஓய்வூதியம் பெற்ற ஓய்வூதியர்களில் தற்போது இடம் பெயர்ந்து வடமராட்சியில் வசிக்கின்ற ஓய்வூதியர்கள், இதுவரை தமது ஓய்வூதிய வவுச்சர்களைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் தமது இந்த வவுச்சர்களைப் பெறுவதற்கு பருத்தித்துறை பிரதேச செயலர் அல்லது உதவி அரசாங்க அதிபர் பணிமனை கணக்காளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(இ)

# நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவேரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்துக்கு நாளை 22 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகைதருமாறு நிதித்துறை அறிவித்துள்ளது.

★ திருமதி பரமேஸ்வரி சிறிகுகன் — காளி கோவிலடி, இடைக்காடு, அச்சுவேலி.

★ மகேஸ்வரி இராசையா — அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

★ இராமலிங்கம் — 6, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

★ ஆழ்வாப்பிள்ளை சிறிகுமார் — 'சிறி இல்லம்', இணுவில் மேற்கு, இணுவில்.

★ செலஸ்போர் றெஜினா மாலினி — 19/5, அடம்பன் வீதி, யாழ்ப்பாணம்.

★ புவனேஸ்வரி கனகலிங்கம் — மே/பா. இ. நாகலிங்கம், கைதடி வடக்கு, கைதடி.

★ யூஸ்ரியான் மரியா யூனிக்கா (வதனா) — உரும்பராய் கிழக்கு, உரும்பராய்.

★ பொன்னையா நடேசன் — மே/பா. க. பாலசுப்பிரமணியம், 6 C, இராஜேஸ்வரி வீதி, நாயன்மார் கட்டு, அரியாலை மேற்கு, அரியாலை.

★ சிதம்பரி சிவசுப்பிரமணியம் — 'மணி இல்லம்', மாரீசன்கூடல், இளவாலை.

★ வேலுப்பிள்ளை வன்னியசிங்கம் — உடுவில் கிழக்கு, கற்பகப்பிள்ளையார் கோவில், சுன்னாகம்.

★ புவனேஸ்வரி நடராசா — அறணானன், கதிரிப்பாய் வீதி, அச்சுவேலி.

★ சிவக்கொழுந்து அருட்பிரகாசம் — வங்கியடி, இணுவில் கிழக்கு, இணுவில்.

★ சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம் — சுழிபுரம் தெற்கு, சுழிபுரம்.

★ பூமணி அருளம்பலம் — சுழிபுரம் தெற்கு, சுழிபுரம்.

★ தம்பர் பரமசாமி — இல. 12, 4 ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை.

★ வி. ராஜரட்ணம் — புகையிரதநிலைய வீதி, மல்லாகம்.

★ திருமதி இராசையா விக்கினராசா ரஞ்சனி — உரும்பராய் வீதி, உரும்பராய் தெற்கு, உரும்பராய்.

★ உலகநாதர் கந்தையா — சொக்கர் வளவு, குப்பிளான், ஏழாலை.

★ பொன்னம்மா கந்தையா — சொக்கர் வளவு, குப்பிளான், ஏழாலை.

★ லாசரஸ் நடராஜா (ஜப்பான்) அல்லது புஸ்பராணி விஸ்வலிங்கம் — ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.

★ அருணாசலம் விக்னேஸ்வரமூர்த்தி — கட்டுவன் தெற்கு, தெல்லிப்பளை.

★ இந்திராணி இராசலிங்கம் — மே/பா. வி. கந்தசாமி, அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

★ தவமணிதேவி தேவராஜா — குமரன்புரம், மூளாய், சுழிபுரம்.

★ மனோன்மணி சின்னத்தம்பி — மணற்பகுதி, புத்தூர்.

★ வைத்திலிங்கம் ஐயாத்துரை — பாலாவோடை, உடுவில் தெற்கு, மானிப்பாய்.

★ ஏனஸ் காணிக்கை — 58, டேவிட் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

★ கனகசூரியர் பாலச்சந்திரன் — இல. 43, கண்ணபுரம், வில்லூன்றி பிள்ளையார் கோவிலடி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

★ சதாசிவம் கனகலிங்கம் — நவரத்தினராஜா வீதி, கோண்டாவில் வீதி, யாழ்ப்பாணம்.

★ திருமதி பூரணம் வல்லிபுரம்— காளிகோவிலடி, மல்லாகம்.

★ கணியூட் நாகேஸ்வரி — சங்கானை கிழக்கு, சங்கானை

★ திருமதி விசாலாட்சி கந்தசாமி — கந்தசாமி கோவிலடி, சங்கத்தானை, சாவகச்சேரி.

★ திருமதி விக்ரேறியா மலக்ரியாஸ் — இந்திரபுரம், முகமாலை, எழுதுமட்டுவாள் அல்லது அடம்பன் வீதி, யாழ்ப்பாணம்.

★ பத்மரஞ்சினி ஜீவரஞ்சன் — மே. பா. திருமதி தங்கரத்தினம் புவனேந்திரன், எழுதுமட்டுவாள், கிளாலி.

★ சேனாதிராஜா சாந்தி — தம்பகாமம், பளை.

★ N. தங்கராசா (சிங்கன்) — மே. பா. மரிய ஜெயசீலன், பாடசாலை ஒழுங்கை, சரசாலை, சாவகச்சேரி. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்த ஆயுள்வேதக் கல்லூரி கிளிநொச்சியில் இயங்கும்?

கிளிநொச்சி, ஜன. 21
யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த லங்கா சித்த ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியை கிளிநொச்சியில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த வைத்தியக் கல்லூரியை கிளிநொச்சியில் இயங்க வைக்க வடக்கு — கிழக்கு மாகாண சுகாதார மகளிர் விவகார அமைச்சு இணங்கி உள்ளது என்றும்—

வைத்தியக் கல்லூரியை கிளிநொச்சியில் இயங்க வைக்க கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. தில்லை நடராஜாவின் சிபார்சு அறிக்கை ஒன்றை மாகாண சுகாதார மகளிர் விவகார அமைச்சு கோரி உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட சித்த ஆயுள்வேத வைத்தியர் சங்கத் தலைவர் டாக்டர் கே. வி.கே திருலோகமூர்த்தி இந்த வைத்தியக் கல்லூரி கிளிநொச்சிக்கு இடமாற்றப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி வடக்கு-கிழக்கு மாகாண ஆயுள்வேதப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பூ. உரோமகேஸ்வரனுக்கு மகஜர் ஒன்றைக் கையளித்திருந்தார். (இ-76)

## பல்கலைக்கழக கொடுப்பனவு

சாவகச்சேரி, ஜன. 21
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களுக்கான கொடுப்பனவுகளும், ஆசிரியர் மற்றும் ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளும் முறையே எதிர்வரும் 23 ஆம், 25 ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தற்காலிக அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகின்றது. (உ-7)

## தொழிலாளி விபத்தில் காயம்

வடமராட்சி, ஜன. 21
கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும்போது பாரம் தூக்கியினால், தாக்குண்டு துறைமுகத் தொழிலாளி ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று நடந்த இவ்விபத்தில் அல்வாய் வடக்கு சக்கோட்டையைச் சேர்ந்த அன்ரனி அமலதாஸ் (18 வயது) என்ற தொழிலாளியே இவ்வாறு படுகாயமடைந்தவர் ஆவார்.

காயமடைந்த இவரை பருத்தித்துறை இறங்குதுறை ஊழியர்கள் வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். (அ-173)

## வீரமரணம்

சாவகச்சேரி, ஜன 21
கடந்த புதன் கிழமை யாழ்ப்பாணத்தில் தவறுதலாக ஏற்பட்ட வெடி விபத்தில் விடுதலைப் புலிகள் போராளியான வீரவேங்கை கிள்ளி [துரை விஜி அல்லது சதீஸ் — மணியம் தோட்டம்] வீரமரணமடைந்தார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## யெகோவாவின் சாட்சிகள் மாநாடு

சாவகச்சேரி, ஜன. 21
யெகோவாவின் சாட்சிகளுடைய வட்டார மாநாடு நேற்று 20 ஆம் திகதி ஆரம்பமானது.

இன்று 21 ஆம் திகதியும் 27 ஆம், 28 ஆம் திகதிகளிலும் சாவகச்சேரி, பேரம்பலம் வீதி பெரியமாவடியில் உள்ள இராஜ்ய மண்டபத்தில் இந்த மாநாடு நடைபெறும்.

நிகழ்ச்சிகள் காலை 9.30க்கு ஆரம்பமாகும். (இ)

## ஆள்பதிவு நிரந்தரக் கிளை இயங்குமாம்

கொழும்பு, ஜன. 20
யாழ்ப்பாணத்தில் உள்ள சிவில் நிர்வாகச் செயலகத்தில் ஆள்பதிவுத் திணைக்களத்தின் நிரந்தரக் கிளை ஒன்றை ஆரம்பிப்பதற்காக ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளர் திரு. விஜயாரணசிங்க முடிவு செய்துள்ளார் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. [இ-3]

## பரீட்சைகள்

சாவகச்சேரி, ஜன. 21
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சிறாப்பர்கள், எழுதுநர்கள், களஞ்சியக் காப்பாளர்கள் தரம் இரண்டுக்கான பதவி உயர்வு எழுத்துப் பரீட்சை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறும்.

தொழில் நுட்பவியலாளர்கள், களஞ்சியக் காப்பாளர்கள், சிறாப்பர்கள், நூலக உதவியாளர்கள் தரம் ஒன்று மற்றும் அதி உயர் தரம் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் நளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும். (உ-7)

## அரச அதிபர் கொழும்பு செல்வார்

சாவகச்சேரி, ஜன. 21
கொழும்பில் நடைபெறவிருக்கும் புனர்வாழ்வு இணைப்புக்குழு கூட்டத்தில்பங்குபற்ற யாழ். அரச அதிபர் திரு செ. பத்மநாதன் நாளை மறுதினம் கொழும்புசெல்லவிருக்கிறார்.

பருத்தித்துறைக்கு இன்று வந்து நாளை மறுதினம் திருமலைக்கு திரும்பவிருக்கும் ''ஹபரண'' கப்பலில் இவர் செல்ல விருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் இடம் பெயர்ந்தோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள், திரவப் பணத்துக்கான நெருக்கடி உட்பட பல விடயங்கள் குறித்து அரசஅதிபர் கொழும்பில் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-3)

கிழக்கு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இராணுவ அணிகளுமே தமது பழைய நிலைகளுக்குத் திரும்பின.

நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் மக்கள் குடியிருப்புக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களையும். விமானக் குண்டுத் தாக்குதலையும் மேற்கொண்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டது. (உ-3)

தீர்வுத்திட்ட...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வேண்டும்.

★ இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும்

—இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அரசு வெளியிட்டுள்ள தீர்வுத்திட்ட சட்டவரைவில் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகளுக்குத் தாம் எதிர்ப்பு எதனையும் தெரிவிக்கவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. (உ-7)

புத்தளந்தில்..
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
காவலரண் மீது விடுதலைப் புலிகள் கடந்த புதன்கிழமை நள்ளிரவு தாக்குதல் ஒன்றை நடத்தினர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

வெகுநேரம் வரை இத் தாக்குதல் நடந்தது என்றும் — சேதவிவரம் தெரியவரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### தகனக்கிரியை நடந்த இடத்தில்

# என்.ரி.ராமராவின் மனைவி உண்ணாவிரத போராட்டம்!

ஹைதராபாத், ஜன .21
நேற்று முன்தினம் தகனம் செய்யப்பட்ட ஆந்திர முன்னாள் முதல்வர் என். டி. ராமராவின் அஸ்தியின் ஒரு பகுதி தனக்கு தரவேண்டுமென்று கோரி அவரது மனைவி லட்சுமி சிவபார்வதி நேற்று உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தினார்.

ராமராவின் இறுதி ஊர்வலத்தின் போது அவரின் முதலாவது மனைவியின் புதல்வர்கள் இருவர் இறுதி ஊர்வல வாகனத்திலிருந்து சிவபார்வதியைக் கட்டாயமாக இழுத்து இறக்கினர்.

அதன் பின்னர் —

நேற்றுக் காலை தகனக்கிரியை நடந்த இடத்துக்குச் சென்ற சிவபார்வதி, ராமராவின் அஸ்தியின் ஒரு பகுதியைத் தனக்குத் தரவேண்டும் என்று வற்புறுத்தினார். காலை 10 மணியளவில் அஸ்தியைத் தரலாம் என்று அவருக்கு பதில் தரப்பட்டது.

மீண்டும் காலை 10மணிக்கு அவர் அங்கு சென்றபோது, அஸ்தி ராமராவின் இரு மகன்மாரால் எடுத்துச் செல்லப்பட்டு விட்டதாக அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

அஸ்தியை தகனக்கிரியை தலத்திலேயே தன்னிடம் தரவேண்டும் என்று கோரி அவர் அங்கேயே அமைர்ந்து உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்தார்.

அங்கு மக்கள் கூட்டம் கூடிவிட்டது.

'செல்வாக்கைப் பயன்படுத்தி பொலீஸாரைக் கொண்டு என்னை அகற்ற முயன்றால் கத்தியால் குத்தி தற்கொலை செய்து கொள்வேன். — என்று எச்சரிக்கை செய்தவாறு அவர் தமது போராட்டத்தைத் தொடர்ந்ததார்.

பிற்பகல் 3 மணியளவில் அஸ்தி அடங்கிய கலசம் அங்கு வைத்து அவருக்கு வழங்கப்பட்டதை அடுத்து தமது போராட்டதை அவர் கைவிட்டார். (உ-3-7)

## நேற்றும் ஷெல் தாக்கு

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று காலை வல்வெட்டித்துறைப் பகுதிகளான மதவடி, மயிலியதனை பிரதேசங்களை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

காலை 6.30 மணிக்கு இடம் பெற்ற இத்தாக்குதல் சம்பவத்தினை அடுத்து அப்பகுதி மக்கள் பெரும் பதற்றத்துடன் காணப்பட்டனர்.

இச்சம்பவத்தில் பெரிய அளவில் சேதமெதுவும் ஏற்படவில்லை. (உ-15-173)

## மதுசார வடிசாலை

தென்மராட்சி, ஜன. 21
பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தென்மராட்சிக் கொத்தணியினரின் வரணி மதுசார வடிசாலை மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

இந்த வருடம் கள் உற்பத்தி அதிகரித்துள்ளதால் மது,சார உற்பத்தியும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதாக கொத்தணி முகாமையாளர் திரு. வே. கிருஷ்ணன் தெரிவித்தார். (இ-117)

## கசிப்பு உற்பத்தி அறுவர் கைது

தென்மராட்சி, ஜன. 21
மீசாலை, உப்புக்கேணி ஆகிய இடங்களில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஆறுபேர் சாவகச்சேரி காவல் துறையினரிடம் சிக்கிக் கொண்டனர்.

கடந்த திங்கட்கிழமை மீசாலை கிழக்கிலும் செவ்வாய்க் கிழமை சாவகச்சேரி உப்புகேணி சப்பச்சி மாவடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகிலும் கசிப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

மீசாலை கிழக்கில் 75 லீற்றர் கோடாவும் 5 போத்தல் கசிப்பும் உற்பத்திச் சாதனங்களும் —

உப்புக்கேணியில் 5 லீற்றர் கசிப்பும் உற்பத்திச் சாதனங்களும் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டன. (இ-117

## அடிக்கடி பறக்கும் ஹெலிகள்

வியாபாரிமூலை, ஜன. 21
கடந்த ஓரிரு தினங்களாக மாலை வேளைகளிலும் இரவிலும் வடமராட்சிக் கடல் பிரதேசத்தின் ஊடாக ஹெலிக்கொப்டர்கள் பலாலியை நோக்கி செல்வதும் திரும்புவதுமாக அடிக்கடி பறந்து திரிவதை அவதானிக்க முடிகிறது. (உ-152)

இடம்பெயர்ந்த...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தரமுல்ல, இசுறுபாயாவில் உள்ள கல்வி, உயர்கல்வி அமைச்சின் ஆசிரியர் ஸ்தாபனக் கிளைக்கு அறிவிக்குமாறு அரசாங்கம் கேட்டுள்ளது.

இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் தமது பெயா, பாடசாலையின் பெயர், பதவி நிலை, தற்போதைய வதிவிட முகவர், தற்போதைய சம்பள மட்டம், சம்பளக் கொடுப்பனவு சம்பந்தமான தற்போதைய ஏற்பாடுகள், தற்காலிக பணி புரிந்தால் அதன் விவரம் ஆகிய தகவல்களை அறிவிக்கவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (அ-7)

தி.மு.க.—
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
போது இல்லாததால் அக் கூட்டணி உருவாக வாய்ப்பு இருப்பதாக விமர்சகர்கள் குறிப்பிட்டனர்.

இதற்கிடையில்—

தமிழகத்தில் இந்திரா காங்கிரஸின் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆராய்ந்து முடிவெடுக்கும் பொறுப்பு ஜனார்த்தன் பூஜாரியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. (உ-3)

## மரண அறிவித்தல்

### சீனிவாசகம் இரத்தினவேல்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட சீனிவாசகம் இரத்தினவேல் 18. 01. 96 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் ரதிதேவியின் அன்புக் கணவரும், சுயனி (நோர்வே), கவிதாஸ், நவதாஸ், முரளிதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், சீனிவாசகம் — தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், சிவரத்தினம், மாணிக்கம் ஆகியோரின் அன்பு மருமனும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ரதி
(மனைவி)

480, யூனிற் - 6
இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளின் கைராசியான

யாழ். திருமாட்டி (சீமாட்டி) புடைவைக் கடல்

தற்பொழுது சாவகச்சேரி நவீனசந்தை மேல்மாடி 12 ஆம் இலக்கத்தில்
கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை எமது அன்பர்களுக்கு அறியத் தருகின்றோம்:

(சி/2945)

★ எமக்கு வேறு கிளைகள் இல்லை ★

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிக பணிமனையில் 21-01-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org